සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)
Third Term Test - Grade 09 - 2023 (2024)

# கிறிஸ்தவம்

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. தீயவழியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் நல்வழியில் வாழ்ந்து இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்,
    i. தாவீது ii. சவுல் iii. நோவா iv. ஆதாம்

02. இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளம் யாது?
    i. நட்சத்திரம் ii. விண்மீன் iii. விருத்தசேதனம் iv. வானவில்

03. தாவீதின் மீது பொறாமை கொண்டு தாவீதை கொலை செய்ய சந்தர்ப்பம் தேடிய அரசன் யார்?
    i. பார்வோன் ii. சவுல் iii. ஏரோது iv. பிலாத்து

04. கிறிஸ்தவ வாழ்வில் மிக முக்கியமான ஊடகம் யாது?
    i. கணினி ii. தொலைபேசி iii. செபம் iv. பத்திரிகை

05. கானாவூர் திருமணம் எந்த நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?
    i. யோவான் ii. மத்தேயு iii. மாற்கு iv. லூக்கா

06. சாரிபாத் விதவையாலும், காகத்தினாலும் போசிக்கப்பட்டவர்,
    i. எலியா ii. எலிசா iii. நாற்றான் iv. அகபு

07. “நீர் புறப்பட்டு போம், உம் மகன் பிழைத்துக் கொள்வான்” எனக் கூறியது,
    i. பேதுரு ii. யோவான் iii. இயேசு iv. பவுல்

08. இயேசு ஓய்வு நாளில் குணப்படுத்தியது,
    i. திமிர்வாதக்காரனை ii. முடவனை iii. குருடனை iv. கை சூம்பியவரை

09. பேதுரு மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தது,
    i. யவீரின் மகளை ii. நயீன் ஊர் விதவையின் மகனை
    iii. தபீத்தாவை iv. லாசருவை

10. கடவுளையும், மோசேயையும் அவமதிக்கிறார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தலைமைக்குருக்களாலும், மறைநூல் அறிஞரினாலும் கைது செய்யப்பட்டவர்,
    i. பேதுரு ii. பவுல் iii. ஸ்தேவான் iv. பிலிப்பு

11. “உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில்” எனக் கூறும் புத்தகம்,
    i. கொரிந்தியர் ii. எபேசியர் iii. தீத்து iv. பிலிப்பியர்

12. புதிய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை,
    i. 12 ii. 33 iii. 27 iv. 42

13. யூதரல்லாத இனத்தவரிடம் நற்செய்தியைக் கொண்டு செல்லுவதற்கான கடவுளின் அழைப்பைப் பெற்றவர்,
i. பேதுரு ii. பவுல் iii. யாக்கோபு iv. பிலிப்பு

14. பவுல் - நம்பிக்கையை எதற்கு ஒப்பிடுகிறார்,
i. மார்புக்கவசம் ii. மிதியடி iii. கேடயம் iv. இடைக்கச்சை

15. இயேசுவின் சீடர்களின் எண்ணிக்கை யாது?
i. பத்து ii. பதின்நான்கு iii. பன்னிரெண்டு iv. ஏழு

16. இஸ்ரவேல் மக்களின் இரண்டாம் அரசன் யார்?
i. சவுல் ii. தாவீது iii. சாலமோன் iv. யோனத்தான்

17. குலமுதுவர் ஈசாக்கின் தகப்பன் யார்?
i. யோசேப்பு ii. ஆபிரகாம் iii. ஆதாம் iv. லோத்து

18. நல்லாயனுக்கு சிறந்த உதாரணம்,
i. ஆமோஸ் ii. மோசே iii. தாவீது iv. இயேசு

19. எமது வாழ்வை வெளிச்சமாக வைத்துக்கொள்ள தினமும் நாம் ……………………
i. பத்திரிகை வாசிக்க வேண்டும் ii. தொலைக்காட்சி பார்க்க வேண்டும்
iii. வேதம் (இறைவார்த்தை) வாசிக்க வேண்டும் iv. கதைப்புத்தகம் வாசிக்க வேண்டும்

20. திருத்தொண்டர்கள் எத்தனை பேர் காணப்பட்டனர்?
i. ஒன்பது ii. ஏழு iii. மூன்று iv. பன்னிரெண்டு

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01. சுருக்கமான விடை எழுதுக.

1. தாவீதிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக.
2. திருத்தொண்டர்களின் பணிகள் இரண்டை தருக.
3. இயேசு கானாவூரில் செய்த புதுமைகள் இரண்டு தருக.
4. ஆதித்திருச்சபையில் காணப்பட்ட பண்புகள் இரண்டு தருக.
5. புனித பவுல் எழுதிய நிருபங்கள் இரண்டு தருக.
6. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எவ்வாறு நற்செய்திப் பரப்ப முடியும் என்பதற்கான 2 உதாரணங்கள் தருக.
7. குடிவெறியினால் ஏற்படும் தீய விளைவுகள் இரண்டு தருக.
8. இறைவார்த்தை மூலம் உமது வாழ்வில் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் இரண்டு தருக.

(16 புள்ளிகள்)

02. 1. இயேசு தொழுகைக் கூடத்திற்குள் சென்ற போது மக்கள் அவரை கூர்ந்து நோக்கியமைக்கான காரணங்கள் இரண்டு தருக.
2. இயேசு கைசூம்பியவரை நலமாக்கும் போது கூறிய விடயங்கள் இரண்டு தருக.
3. இயேசுவின் இச்செயற்பாட்டிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டல்கள் ஐந்தை விளக்குக.

(11 புள்ளிகள்)

03. 1. எமது நாட்டின் கல்வித்திட்டத்திற்காக பாரிய சேவையாற்றிய குருவானவர் யார்?
2. இயேசுவை பின்பற்றுவதனால் எம்மிடையே இருக்க வேண்டிய முக்கியமான செயல்கள் இரண்டு தருக.
3. தன்னலம் துறந்து இயேசுவைப் பின்பற்றுபவரான எமது வாழ்வில் இருக்க வேண்டிய பண்புகள் ஐந்து தருக.

(11 புள்ளிகள்)

04. 1. அன்றாட வாழ்வில் நாம் முகம் கொடுக்கும் அனர்த்தங்கள் இரண்டு தருக.
2. துன்பவேளையில் இறைவன் உதவி செய்யும் விதங்கள் மூன்று தருக.
3. இறைவனின் அடைக்கலத்தையும், பெலனையும் பெற்ற நாம் பிறரோடு இணைந்து வாழ்வதற்கும் அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்து தருக.

(11 புள்ளிகள்)

05. 1. ஊனியல்பின் செயல்கள் இரண்டு தருக.
2. போதைப் பொருட்களுக்கு அடிமையாவதால் ஏற்படும் விளைவுகள் இரண்டு தருக.
3. இளம் தலைமுறையினரை போதைபொருள் பாவனையிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய வழிகள் ஐந்து தருக.

(11 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. நல்லாயன்
2. இயேசுவின் அன்பு
3. ஸ்தேவான்
4. தாவீது அரசன்

(11 புள்ளிகள்)

(4) WWW.PastPapers.WiKi (3)

Download Term Test Papers, Short Notes From One Place!

(4) WWW.PastPapers.WiKi (4)
Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)
Third Term Test - Grade 09 - 2023 (2024)

# கிறிஸ்தவம்

விடைப்பத்திரம்

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. iii | 6. i | 11. i | 16. ii |
| 2. iv | 7. iii | 12. iii | 17. ii |
| 3. ii | 8. iv | 13. ii | 18. iv |
| 4. iii | 9. iii | 14. iii | 19. iii |
| 5. i | 10. iii | 15. iii | 20. ii |

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01.
1. இறைபயம், கீழ்படிவு
2. பந்தி பகிர்ந்தளிப்பதற்கும், நலன்புரிப் பணிக்கும்
3. தண்ணீர் இரசமாக மாற்றுதல், அரச அலுவலரின் மகன் குணப்படுதல்
4. ஜெபத்தில் தரித்திருந்தனர், ஒற்றுமையாக இருந்தனர்
5. உரோமயர், எபேசியர்
6. பொருத்தமான விடை எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.
7. சண்டை, பொருளாதார பிரச்சினை
8. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

02.
1. ஓய்வு நாளில் இயேசு குணப்படுத்துவாரா என்று
2. ஓய்வு நாளில் நன்மை செய்வதா தீமை செய்வதா உயிரைக் காப்பதா எது முறையென்று இயேசு வினவினார்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

03.
1. வண ஜேம்ஸ் எச் டொல்
2. தன்னலம் அகற்றுதல், சிலுவை சுமத்தல்
3. பாட புத்தகம் 81ம் பக்கம்

04.
1. வெள்ளம், சூறாவளி, புயல்
2. அடைக்கலம் பெலனுமாய் இருக்கிறார்
   வாழ்வை பாதுகாக்கிறார்
   பயத்தை நீக்குகிறார்
3. பாடபுத்தகம் 74ம் பக்கம்

05.
1. குடிவெறி, பரத்தமை
2. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

06. தலைப்பிற்கு பொருத்தமான விடை எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.

PAST PAPERS WIKI
(1) WWW.PastPapers.WiKi (1)



Download Term Test Papers, Short Notes From One Place!

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**